FORB Learning Platform

# எழுத்துப்பிரதி: மதம் அல்லது நம்பிக்கைக்கான சுதந்திரத்திற்கான மட்டுப்பாடுகள்

பல அரசாங்கங்கள் மத சுதந்திரம் அல்லது நம்பிக்கைக்கான சுதந்திரத்தின் மீது மட்டுப்பாடுகளை விதிக்கின்றன என்பதனை செய்திகளைப் பார்ப்பதிலிருந்தும், அநேகமாக உங்கள் சொந்த வாழ்க்கை அனுபவத்திலிருந்தும் நீங்கள் அறிந்திருப்பீர்கள். அவர்கள் ஒரு ஏதேனுமொரு காரணத்திற்காக மத வெளிப்படுத்தல்களை மட்டுப்படுத்த வேண்டும் என்று வாதிடுகின்றனர். **ஆகவே, இம்மட்டுப்பாடுகள் எப்போது நியாயமானவையாக மற்றும் அனுமதிக்கப்பட்டவையாகக் காணப்படும் மற்றும் எப்போது அவ்வாறு காணப்படாது என நமக்கு எப்படித் தெரியும்?**

ஒரு மதத்தை அல்லது நம்பிக்கையைக் கொண்டிருப்பதற்கான, தேர்ந்தெடுப்பதற்கான, மாற்றுவதற்கான அல்லது விட்டுச் செல்வதற்கான உரிமை முழுமையானது என்றும் அவற்றை ஒருபோதும் மட்டுப்படுத்தப்பட முடியாது என்றும் சர்வதேச மனித உரிமைகள் சட்டம் கூறுகின்றது. மறுபுறத்தில், மதம் அல்லது நம்பிக்கையொன்றை வெளிப்படுத்தும் உரிமை மட்டுப்படுத்தப்படக்கூடியது, ஆனால் நான்கு விதிகள் பின்பற்றப்படும்போது மட்டுமே அவற்றை மட்டுப்படுத்த முடியும்.

எந்தவொரு மட்டுப்பாடும் சட்டத்தில் குறிப்பிடப்பட்டிருக்க வேண்டும்.

அரசு, காவல்துறை மற்றும் நீதிமன்றங்கள் முன்னெதிர்வுகூறமுடியாத வகையில் அல்லது முரண்பாடான வகையில் செயற்படுவதைத் தடுப்பதே இதன் நோக்கமாகும்.

இம்மட்டுப்பாடுகள், பொது பாதுகாப்பு, பொது ஒழுங்கு, சுகாதாரம் அல்லது ஒழுக்கங்கள் அல்லது ஏனையோரின் உரிமைகள் மற்றும் சுதந்திரங்களை பாதுகாக்க அவசியமானவையாக இருக்க வேண்டும்.

இது முக்கியமானது. ஏனையோரைப் பாதுகாப்பதற்கு அவசியமென்பதற்காக மட்டுப்பாடொன்றினை விதித்தலானது, வாக்குகளின் அடிப்படையில் எவை வெற்றிபெறுகின்றன என்பதன் அடிப்படையில் மட்டுப்பாடுகளைத் தெரிவு செய்வதிலிருந்து மிகவும் வேறுபட்டதாகும்.

மட்டுப்பாடுகள் பாரபட்சமானவையாக இருக்க கூடாது,

எந்தவொரு மட்டுப்பாடும் வெளிப்படுத்தலினால் ஏற்படுத்தப்பட்டுள்ள பிரச்சினைக்கு விகிதசமனானதாக இருக்க வேண்டும்.

இந்த விதிகள் மிகவும் முக்கியமானவை. அவை இல்லாமல், அரசாங்கங்கள் தாம் விரும்பாத எந்தவொரு அல்லது அனைத்து குழுவையும் அல்லது நடைமுறையையும் கட்டுப்படுத்தலாம். மட்டுப்பாடுகள் கடைசி முயற்சியாக இருக்க வேண்டுமே தவிர அது அரச கட்டுப்பாட்டுக்கான கருவியொன்றல்ல.

விதிகள் எதைக் குறிக்கின்றன என்பதை விளக்குவதற்கு நாம் தயாரிக்கப்பட்ட உதாரணமொன்றைப் பயன்படுத்துவோம்.

ஐந்து வெவ்வேறு மதக் குழுக்கள் உள்ள ஒரு நகரத்தை கற்பனை செய்து பாருங்கள். அவர்கள் அனைவருக்கும் வழிபாட்டுத் தலங்கள் உள்ளன. அவை அனைத்தும் ஒரு குறிப்பிட்ட அளவு ஒலியை எழுப்புகின்றன. இதனை அயலவர்கள் விரும்பவில்லை. ஆனால் ஒரு சிறிய, செல்வாக்கற்ற குழு பற்றி மட்டுமே காவல்துறைக்கு புகார்கள் கிடைக்கின்றன…

அதிக அளவு ஒலி ஆரோக்கியத்திற்கு உகந்தது அல்ல என்பதுடன் பொது சுகாதாரம் என்பது மட்டுப்பாடுகளுக்கான நெறிமுறையான அடிப்படையொன்றாகும். எனவே உள்ளூர் அதிகாரசபை என்ன செய்ய வேண்டும்? பொது சுகாதாரத்தைப் பாதுகாப்பதற்கு எவ்வகையான ஒழுங்குவிதிகள் அவசியமானவையாக, பாரபட்சமற்றவையாக மற்றும் விகிதசமனானவையாகக் காணப்படும்?

இந்த சந்தர்ப்பத்தில், அனைத்து பொதுக் கூட்டங்களுக்கும் அனுமதிக்கப்பட்ட ஒலி அளவொன்றினை ஒழுங்குபடுத்துகின்ற ஒரு பொதுச் சட்டம் பொருத்தமானதாக இருக்கும். எல்லா மதக் குழுக்களுக்கும் மற்றவர்களுக்கும் சமமாக ஏற்பாகின்ற சட்டம் இருக்க வேண்டும். எந்தவொரு குழுவும் குறித்த ஒலி அளவைத் தாண்டினால், அதை குறைக்க அல்லது அபராதத்தை எதிர்கொள்ள தயாராக வேண்டும் என அவர்களைத் தேவைப்படுத்துதல் விகிதசமனானதாக அமையும். இதை விடுத்து முழுமையான அமைதியினைக் கோருவது அல்லது அனைவரும் ஒன்றாகச் சந்திப்பதைத் தடை செய்வது ஆகிய விடயங்கள் எச்சந்தர்ப்பத்திலும் விகித சமனாக அமையாது.

பொலிஸார் செல்வாக்கற்ற குழுக்கள் பற்றிய புகார்களை மட்டுமே பெற்றுக்கொள்கின்றபோதிலும், அவர்கள் சட்டத்தை சமமாக செயற்படுத்த வேண்டும்.

இது மிகவும் சிறிய, எளிய உதாரணமாகும்.

மதம் அல்லது நம்பிக்கைக்கான சுதந்திரம் தொடர்பான பாரிய மீறல்களை நோக்கும் போது இந்த விதிகள் புறக்கணிக்கப்பட்டுள்ளமையினை இலகுவாக காணலாம். ஏனெனில், குறித்த விதிகள் வெளிப்படையாகவே அவசியமற்றவையாகவும், பாரபட்சமானவையாகவும் அல்லது விகிதசமனற்றவையாகவும் காணப்படும்.

சில நாடுகள் மத நடவடிக்கைகளுக்கென பதிவு செய்யப்பட்ட கட்டிடங்களுக்கு வெளியே இடம்பெறக்கூடிய அனைத்து மத நடவடிக்கைகளையும் தடை செய்கின்றன. இதன்மூலம் உங்கள் வீடுகளில் விருந்தினருடன் உணவு அருந்துவதற்கு முன்னர் நன்றி கூறி பிரார்த்தனை செய்வது கூட சட்டவிரோதமாகும். இந்த மட்டுப்பாடு வெளிப்படையாகவே நெறிமுறையற்றதாக விளங்குகின்றது!

ஆனால் சர்ச்சைக்குரிய சந்தர்ப்பங்கள் நிறைய உள்ளன. முகம் மற்றும் கால்களைத் தவிர எல்லாவற்றையும் மறைக்கின்ற புர்கினிஸ் எனும் நீச்சல் உடைகளை பிரான்சில் உள்ள நகராதிபதி தடை செய்வது சரியா? அல்லது உங்கள் நம்பிக்கைகளைப் பற்றி மற்றவர்களிடம் சொல்லும் உரிமையை இந்தியாவின் சில பகுதிகளில் உள்ள அதிகாரிகள் மட்டுப்படுத்துவது சரியா?

இந்த முன்வைப்பில், மட்டுப்பாடுகள் நெறிமுறையானவையா என்பதைத் தீர்மானிக்க நீதிமன்றங்கள் கேட்க வேண்டிய ஏழு கேள்விகளைப் பற்றிப் பார்க்கப்போகிறோம். நீங்கள் சந்திக்கும் மட்டுப்பாடுகளை மதிப்பிடுவதற்கு இது உதவும் என்று நாம் நம்புகிறோம்.

**ஒரு அரசு மட்டுப்பாடுகளை விதிக்கும்போது, முதலில் கேட்க வேண்டிய கேள்வி என்னவென்றால், குறித்த மட்டுப்பாடு மதம் அல்லது நம்பிக்கையொன்றினைக் கொண்டிருப்பதற்கான அல்லது ஏற்றுக்கொள்வதற்கான முழுமையான உரிமையில் தலையீடு செய்கின்றதா அல்லது அதை வெளிப்படுத்தும் உரிமையில் தலையீடு செய்கின்றதா என்பதாகும்.**

முழுமையான உரிமை மட்டுப்படுத்தப்பட்டிருப்பின், அரசின் நடவடிக்கைகள் நெறிமுறைதன்மை வாய்ந்தன அல்ல. ஆனால் மதத்தை வெளிப்பாடுத்துவதற்கான உரிமை மட்டுப்படுத்தப்பட்டிருப்பின் நாங்கள் எங்கள் அடுத்த கேள்விக்கு செல்கிறோம்.

**மட்டுப்படுத்தப்படுகின்ற நடத்தை, மதம் அல்லது நம்பிக்கையின் வெளிப்பாடொன்றா அல்லது அது வெறும் நடத்தையொன்றா?**

நாம் செய்யும் வி'யங்கள் பெரும்பாலும் எமது நம்பிக்கைகளால் வழிநடத்தப்படுகின்றன. ஆனால் நாம் செய்யும் அனைத்தும் மதம் அல்லது நம்பிக்கையின் பாதுகாக்கப்பட்ட வெளிப்படுத்தல் அல்ல. வெளிப்படுத்துவதற்கான உரிமை மட்டுப்படுத்தப்பட்டதாக ஒருவர் புகார் கூறும்போது, சம்பந்தப்பட்ட நடத்தை, மதம் அல்லது நம்பிக்கையின் வெளிப்படுத்தலொன்றாக இருக்கிறதா என்று தீர்மானிப்பதன் மூலம் நீதிமன்றங்கள் விசாரணையைத் தொடங்குகின்றன. நடத்தை மற்றும் நம்பிக்கை என்பன நெருக்கமாக தொடர்புற்றிருக்கின்றனவா என்பதனைப் பார்ப்பதற்காக இவற்றுக்கிடையிலான தொடர்பினைப் பார்ப்பதனூடாக அவர்கள் இதனை செய்கிறார்கள்.

சில நேரங்களில் இது எளிதானது. தேவாலயத்திற்குச் செல்வது கிறிஸ்தவத்துடன் நெருக்கமாக தொடர்புற்றுள்ளது. அதேபோன்று நோன்பிருத்தல் இஸ்லாத்துடன் நெருக்கமாக தொடர்புற்றுள்ளது.

ஆனால் இது எப்போதும் எளிதல்ல. ஒரு கிறிஸ்தவருக்கு சிலுவையை அணிவது முக்கியமல்ல் ஆனால் மற்றுமொருவருக்கு, அது மத அடையாளத்தின் ஆழமான வெளிப்பாடு. மேலும் முஸ்லீம் பெண்களுக்கு தலை மறைப்பு குறித்து வெவ்வேறு நம்பிக்கைகள் உள்ளன.

எந்த நம்பிக்கைகள் சரியானவை என்பதை தீர்மானிப்பது நீதிமன்றங்களின் வகிபாகம் அல்ல. எவை மத வெளிப்படுத்தல்களாகக் கருதப்படக்கூடியவை என்பதனைத் தீர்மானிப்பதனூடாக, நீதிமன்றங்கள், ஏனையவற்றைவிட சில இறையியல் பொருட்கோடல்களுக்கு முன்னுரிமை அளிக்கின்ற கோட்பாடு குறித்த தீர்ப்புகளை எடுக்கும் அபாயத்தை எதிர்கொள்கின்றன. மனித உரிமைகள் தனிநபர்களுக்குரியது. எனவே நீதிமன்றங்கள் நிறுவனக் கோட்பாடுகளுக்குப் பதிலாக சம்பந்தப்பட்ட நபரின் நம்பிக்கைகளைப் பார்க்கின்றன. ஏனெனில் ஒருவர் ஒரு செயலை மத வெளிப்படுத்தலாகக் கருதினால், அவருக்கு அது மத வெளிப்படுத்தலொன்றே ஆகும்.

**பாதுகாக்கப்பட்டுள்ள வெளிப்படுத்தலொன்று மட்டுப்படுத்தப்பட்டுள்ளதாக நாங்கள் தாபித்தவுடன், குறித்த மட்டுப்பாடு சட்டத்தில் குறிக்கப்பட்டுள்ளதா என்பதனை நாம் பரிசீலிக்க வேண்டும்.**

குறித்த மட்டுப்பாட்டினை ஒழுங்குபடுத்துகின்ற ஏதேனும் எழுதப்பட்ட சட்டம், தீர்ப்புச் சட்டம் அல்லது வழக்காற்று சட்டம் சட்டம் உள்ளதா? அல்லது எந்தவொரு சட்ட அடிப்படையுமின்றி அது அதிகாரிகளால் விதிக்கப்படுகிறதா? சட்டபூர்வமான அடிப்படை இல்லை என்றால், அம்மட்டுப்பாடு நெறிமுறையானதல்ல.

**அடுத்த கட்டம் நெறிமுறையான காரணியொன்றினைப் பாதுகாப்பதற்கு குறித்த மட்டுப்பாடு அவசியமானதா என்பதனை மதிப்பிடுதல் ஆகும்.**

இதற்கு பதிலளிக்க, முதலாவதாக மட்டுப்படுத்தப்பட்டிருக்கும் நடைமுறைகளுக்கும் ஏதேனுமொரு நெறிமுறையான காரணிக்கும் இடையே நேரடி தொடர்பு இருக்கிறதா என்பதனைப் பார்க்க வேண்டும். இரண்டாவதாக மட்டுப்பாடு அவசியமானதா என்று பார்க்க வேண்டும். இந்த கேள்விகள் ஒவ்வொன்றையும் பார்ப்போம்.

சர்வதேச சட்டத்தின் கீழ், மதம் அல்லது நம்பிக்கைக்கான சுதந்திரத்தை மட்டுப்படுத்துவதற்கான நெறிமுறையான காரணங்களாக பொது பாதுகாப்பு, பொது ஒழுங்கு, சுகாதாரம் அல்லது ஒழுக்கநெறிகள் அல்லது பிறரின் உரிமைகள் மற்றும் சுதந்திரங்களை பாதுகாத்தல் ஆகியனவே காணப்படுகின்றன.

ஆகவே, மட்டுப்படுத்தப்பட்டுள்ள நடத்தை இக்காரணிகளை எவ்வகையில் அச்சுறுத்துகின்றது? இதற்கு ஆதாரம் உள்ளதா?

மட்டுப்படுத்தப்பட்டிருக்கும் நடைமுறைகள் மற்றும் இந்நெறிமுறையான காரணிகளுள் ஒன்றிற்கு இடையேயான ஒரு **நேரடித் தொடர்பை** அரசு நிரூபிக்க வேண்டும்.

இந்து சாதி அமைப்பு மக்களை உயர்ந்த மற்றும் தாழ்ந்த சாதிகளாக மற்றும் சாதியற்ற குழுக்களாகப் பிரிக்கிறது. சாதியற்ற குழுக்கள் பாரிய பாரபட்சம் மற்றும் சமூக மற்றும் பொருளாதார பாதகநிலைகளை எதிர்கொள்கின்றன. சில கோயில்கள் சாதியற்ற இந்துக்கள் உள்நுழைவதைத் தடுப்பதனை வழக்கமாகக் கொண்டிருந்தன. இந்தியா 1949 இல் சாதி முறையை ஒழித்தது, அதன்பின்னர் கோயில்கள் சாதியற்ற இந்துக்களை கோயில்களுக்குள் நுழைவதை மறுப்பதற்கு அனுமதிக்கப்படவில்லை. இம்மட்டுப்பாடு இத்தேவைப்பாட்டினை பூர்த்தி செய்துள்ளது- அதாவது சாதி பாரபட்சத்தைத் தடுப்பதற்கும் மற்றவர்களின் உரிமைகள் மற்றும் சுதந்திரங்களைப் பாதுகாப்பதற்கும் இடையே தெளிவான, நேரடி தொடர்பு உள்ளது.

ஆனால் எல்லா மட்டுப்பாடுகளுக்கும் இதுபோன்ற தெளிவான தொடர்பு காணப்படுவதில்லை. சில சமயங்களில் அரசாங்கங்கள் நெறிமுறையான காரணிகளை தவறாக சித்தரிக்கின்றன அல்லது முறைகேடாகப் பயன்படுத்துகின்றன.

மதம் அல்லது நம்பிக்கைக்கான சுதந்திரத்திற்குரிய மட்டுப்பாடுகள் பெரும்பாலும் **பொது ஒழுங்கோடு** தொடர்புடையவை. பொது ஒழுங்கிற்கான சட்டங்கள், அச்சுறுத்தல்கள், தாக்குதல், வன்முறையைத் தூண்டுதல் மற்றும் சில சமயங்களில் இறை நிந்தனை உள்ளிட்ட பல விடயங்களை ஒழுங்குபடுத்துகின்றன.

மதம் அல்லது நம்பிக்கையை வெளிப்படுத்துவதற்கான சுதந்திரம் என்பது நீங்கள் உண்மையென்று நம்புகின்ற விடயத்தை சொல்லும் உரிமையை உள்ளடக்கியது. நம்பிக்கைகள் அமைதியாக அல்லது வன்முறையைத் தூண்டும் வழிகளில் வெளிப்படுத்தப்படலாம். துரதிஷ்டவசமாக சிலர் தங்கள் சொந்த நம்பிக்கைகள் தவிர்ந்த வேறு நம்பிக்கைகள் அமைதியாக வெளிப்படுத்தப்படுகின்றபோது அதனால் புண்படுத்தப்படுவதுடன் அதற்கு வன்முறையான வழிகளில் பதிலளிக்கின்றார்கள்.

சில நாடுகள் குறித்த சில நம்பிக்கைகளின் அமைதியான வெளிப்படுத்தல்கள் வன்முறையினைத் தூண்டக்கூடிய அபாயத்தினை ஏற்படுத்துவதாகவும், ஆகவே அவற்றைத் தடை செய்வதற்குரிய நெறிமுறையான பொது ஒழுங்கு காரணிகள் தமக்கிருப்பதாகவும் வாதிட்டு அவற்றைத் தடை செய்கின்றன. இந்தோனேசியா அஹ்மதி அல்லது ஏனைய நாத்திக நம்பிக்கைகளின் பொது வெளிப்படுத்தலை இவ் அடிப்படையில் தடை செய்துள்ளது. இதன் விளைவாக, சில சமயங்களில் குற்றவாளிகள் மீது தாக்குதல் குற்றம் சுமத்தப்படுவதற்குப் பதிலாக வன்முறையால் பாதிக்கப்பட்டவர்கள் மீது இறை நிந்தனை அல்லது தூண்டுதல் குற்றச்சாட்டு சுமத்தப்படுகிறது.

இது போன்ற சட்டங்கள் வன்முறையைக் குறைக்காது. மாறாக, ‘தவறான’ நம்பிக்கைகளைக் கொண்டவர்கள் தண்டிக்கப்பட வேண்டும் என்ற கருத்தை அவை வலுப்படுத்துகின்றன.

மட்டுப்பாடுகளைப் பிரயோகிப்பதற்கான மற்றுமொரு சூட்சுமமான காரணி **பொது ஒழுக்கங்கள்** ஆகும். அனைவருக்கும் ஒரே மாதிரியான ஒழுக்கங்கள் இருக்கிறதா, யாருடைய ஒழுக்கங்கள் ‘பொதுவானவை’? பொது ஒழுக்கங்களின் வரையறையானது “பல சமூக, தத்துவ மற்றும் மத மரபுகளிலிருந்து” வர வேண்டும் என்று ஐ.நா மனித உரிமை நிபுணர்கள் கூறுகின்றனர். வேறு வார்த்தைகளில் கூறுவதானால், பெரும்பான்மையினரின் ஒழுக்கநெறிகளை மட்டும் அடிப்படையாகக் கொண்டு நீங்கள் மட்டுப்பாடுகளைக் கொண்டிருக்க முடியாது.

**தேசிய பாதுகாப்பு** என்பது மதம் அல்லது நம்பிக்கைக்கான சுதந்திரத்தினை மட்டுப்படுத்துவதற்கான நெறிமுறையான காரணியொன்றல்ல என்பது உங்களுக்கு ஆச்சரியமாக இருக்கலாம்.

சில அரசாங்கங்கள் குழுக்களை, குறிப்பாக தமது எதிரி நாட்டின் மதத்தைப் பின்பற்றும் குழுக்களை மோசமானவர்களாக்கிக் காட்டுவதுடன் அவர்களை தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் விடுப்பவர்கள் எனவும் அழைக்கின்றன. பொது சுகாதாரம், பாதுகாப்பு மற்றும் ஒழுங்கு என்பன மட்டுப்பாடுகளுக்கான போதுமான தளத்தினை அளிப்பதாகவும், தேசிய பாதுகாப்பைச் சேர்ப்பது மதம் அல்லது நம்பிக்கைக்கான சுதந்திரம் மிகவும் அதிகமாகத் தேவைப்படும்போது அதனைப் பொருத்தமற்றதாக மாற்றும் என்றும் குறித்த பிரகடன எழுத்தாளர்கள் ஒப்புக்கொண்டனர்.

ஆகவே, மட்டுப்படுத்தப்பட்டுள்ள நடைமுறைகள் நெறிமுறையான காரணியொன்றை எவ்வாறு அச்சுறுத்தலுக்குள்ளாக்கும் என்பதைக் காட்டும் ஒரு **நேரடி தொடர்பை** அரசு நிரூபிக்க வேண்டும் என்பதை நாங்கள் நிறுவியுள்ளோம். நெறிமுறையான காரணிகள் சரியான முறையில் பொருட்கோடல் செய்யப்பட்டு ஏற்பாக்கப்பட்டுள்ளனவா என அவதானித்தல் முக்கியமென்றும் நாம் பார்த்திருக்கின்றோம்.

எங்கள் கேள்வியின் இரண்டாம் பகுதிக்கு செல்லலாம் - **குறித்த மட்டுப்பாடு அவசியமானதா?** அரசியல் அல்லது பெரும்பான்மை கண்ணோட்டத்தில் விரும்பத்தக்கது அல்ல, ஆனாலும் அவசியமானது.

அரசாங்கம் அவர்கள் முன்மொழிகின்ற மட்டுப்பாட்டிற்கும் மற்றவர்களின் உரிமைகள் மற்றும் சுதந்திரங்களைப் பாதுகாப்பதற்கும் இடையே நேரடி தொடர்பு இருப்பதாக காட்டியுள்ளது என்று கருதுவோம்.

*ஒரு மட்டுப்பாட்டை ஊக்குவிக்கும் அளவுக்கு அச்சுறுத்தல் தீவிரமாக உள்ளதா?*

*முன்மொழியப்பட்டுள்ள மட்டுப்பாடு மற்றவர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதில் பயனுள்ளதா?*

*உரிமைகளை மட்டுப்படுத்தாமல் பிரச்சினையை தீர்க்க வேறு வழிகள் உள்ளனவா?*

பிரச்சினை தீவிரமானதாக இல்லாவிட்டால், முன்மொழியப்பட்டுள்ள மட்டுப்பாடு அதைத் தீர்ப்பதற்கு பங்களிக்காது அல்லது உரிமைகளை மட்டுப்படுத்தாமல் தீர்க்க வேறு வழிகள் இருந்தால், அப்போது மட்டுப்பாடு அவசியமில்லை.

நெரிசல் மிகுந்த பௌத்த பயிற்சி மையங்கள் தொடர்பாக சுகாதார மற்றும் பாதுகாப்பு கரிசனைகள் இருப்பதாக சீன அரசாங்கம் கூறுகிறது. உடல்நலம் மற்றும் பாதுகாப்பு ஆகியவை நெறிமுறையான காரணங்கள். குறித்த மையங்களை புதுப்பிப்பதும் விரிவுபடுத்துவதும் இப்பிரச்சனைக்கு தீர்வாக அமையலாம். இந்தத் தீர்வு உரிமைகளை மட்டுப்படுத்தாது. மாறாக, அரசாங்கம் முழு பகுதியையும் இடித்து 1000 பெண் துறவிகளை வலுக்கட்டாயமாக அகற்றியது. இது அவசியமற்ற ஒன்றாகும்.

நிச்சயமாக, சில மட்டுப்பாடுகள் அவசியமாகும். சில தீட்சை சடங்குகள் மற்றும் பெண் பிறப்புறுப்பு சிதைவு போன்ற தீங்கு விளைவிக்கும் பாரம்பரிய நடைமுறைகள் தடை செய்யப்பட வேண்டும் என்று ஐக்கிய நாடுகள் சபை தெளிவாகக் கூறியுள்ளது.

பல சந்தர்ப்பங்கள் அவ்வளவு தெளிவாக இல்லை. ஆனால் மட்டுப்பாடு அவசியம் என நிரூபிக்கும் சுமை அரசிடமே உள்ளது.

**அரசிற்கு மட்டுப்பாடுகளை விதிப்பதற்கான நெறிமுறையான காரணிகள் உண்டு மற்றும் அம்மட்டுப்பாடு அவசியமானதென நாங்கள் தாபித்தவுடன், குறித்த மட்டுப்பாடு பாரபட்சமானதா என்பதை நாங்கள் பார்க்க வேண்டும்.**

சட்டங்கள், கொள்கைகள் அல்லது நடைமுறைகள் பாரபட்சமானவையா என்பதைப் பார்ப்பது எளிது என்று நீங்கள் நினைக்கலாம். அவை வெளிப்படையாகவே சிலருக்கு ஏற்புடையதாகவும் ஏனையோருக்கு ஏற்பாகாமலும் இருப்பின் அவை பாரபட்சமானவை. இது நேரடி பாரபட்சம் என்று அழைக்கப்படுவதுடன் தடைசெய்யப்பட்டுள்ளது.

ஆனால் சில நேரங்களில் அனைவருக்கும் ஏற்பாகின்ற சட்டங்கள் சிலருக்கு பெரும் தாக்கத்தை ஏற்படுத்துகின்றன ஆனால் ஏனையோருக்கு எந்த பாதிப்பையும் ஏற்படுத்தாது. இது மறைமுக பாரபட்சம் என்று அழைக்கப்படுகிறது.

நாங்கள் கற்பனையில் சித்தரித்துக் கொண்ட எமது நகரம் மற்றும் அங்கு காணப்படுகின்ற சத்தம் நிறைந்த வழிபாட்டுத் தலங்கள் பற்றி இப்போது மீண்டும் பார்ப்போம். உள்ளூர் அதிகார சபை பொது நிகழ்வுகளின் ஒலி அளவைக் கட்டுப்படுத்தும் ஒரு சட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது என்பதுடன் மத சமுதாயங்களும் அதற்கேற்றாற்போல தமது ஒலி பெருக்கிகளை சரிசெய்துள்ளன. ஆனால் தேவாலய மணிகள் மிகவும் சத்தமாக ஒலிக்கின்றன என்பதுடன் அவற்றின் ஒலி அளவை நீங்கள் குறைக்க முடியாது. இங்கு தேவாலயம் ஒரு பாரம்பரிய நடைமுறையை கைவிட வேண்டியுள்ள அதேவேளை, ஏனைய சமுதாயங்களுக்கு எந்த பிரச்சினைகளும் இருக்கவில்லை.

இது மறைமுக பாரபட்சம்.

மறைமுக பாரபட்சத்தினை ஏற்படுத்தும் பொதுவான சட்டங்களுக்கு நிறைய உதாரணங்கள் உள்ளன:

பல நாடுகளில் பொது இடங்களில் கத்திகளை எடுத்துச் செல்வது தடை விதிக்கப்பட்டுள்ளது. சீக்கியர்களைத் தவிர, வேறு மத மற்றும் நம்பிக்கை குழுக்களில் இது எந்த விளைவையும் ஏற்படுத்தாது. சீக்கிய ஆண்கள் தங்கள் சட்டைக்கு கீழ் கிர்பன் எனப்படும் சம்பிரதாயக் கத்தியொன்றினை அணிய வேண்டும். எனவே, இச்சட்டம் தங்கள் மதக் கடமைகளை பூர்த்தி செய்வதற்கான சீக்கியர்களின் திறனை மட்டுப்படுத்துகிறது.

சில நாடுகளில் உள்ள திட்டமிடல் ஒழுங்குவிதிகளுக்கு அமைய புதிய கட்டிடங்கள் அருகிலுள்ள ஆதன உரிமையாளர்களால் அனுமதிக்கப்பட வேண்டும். இங்கு அயலவர்கள் பாரபட்சமுடையவர்களாகக் காணப்படலாம். ஆகவே சிறிய, பாரம்பரியமல்லாத குழுக்களைவிட பாரம்பரியக் குழுக்கள் திட்டமிடலுக்கான அனுமதியினை மிக இலகுவாகப் பெற்றுக் கொள்கின்றன.

கொள்கைகள் மற்றும் நடைமுறைகளும் சிக்கல்களை உருவாக்கலாம். ஒரு பல்கலைக்கழகம் எப்போதும் சனிக்கிழமைகளில் நுழைவுத் தேர்வுகளை நடத்தினால், அட்வென்டிஸ்டுகள் மற்றும் யூதர்கள் பாதிக்கப்படலாம். பெரும்பாலும் சிறுபான்மை மதக் குழுக்களைச் சேர்ந்த தொழிலாளர்கள் தங்களது சொந்த பண்டிகைகளுக்கு விடுமுறை எடுக்க அனுமதிக்கப்படுவதற்குப் பதிலாக பெரும்பான்மை மத விழாக்களை சார்ந்தே விடுமுறைகளை எடுப்பதற்கு அனுமதிக்கப்படுகிறார்கள்.

நேரடி பாரபட்சம் எப்போதும் தடைசெய்யப்பட்டுள்ளது. ஆனால் நீதிமன்றங்கள் மறைமுக பாரபட்சத்தினை நடைமுறை பிரச்சனையாக கருதி நியாயமான முறையில் சாத்தியமான சந்தர்ப்பங்களில் தீர்க்க வேண்டும். பெரும்பாலும் எளிய தீர்வுகளைக் கண்டறியலாம். எங்கள் கற்பனை நகரத்தில், ஞாயிற்றுக்கிழமைகளிலும் மத விழாக்களிலும் தேவாலய மணிகள் ஒலிக்க அனுமதிக்கும் வகையில் விதிவிலக்கு அளிக்க முடியும்.

சுவீடனில், பல்கலைக்கழக நுழைவுத் தேர்வுகள் சனிக்கிழமைகளில் மட்டுமே நடத்தப்பட்டன. அவை இப்போது வெள்ளிக்கிழமையும் நடத்தப்படுகின்றன. மேலும் வேலை இடங்களில் சீருடைகள் பெரும்பாலும் தலைப்பாகைகள் போன்ற மாறுபாடுகளை உள்ளடக்கியதாக மாற்றப்படலாம்.

ஆனால் அது எப்போதும் சாத்தியமில்லை என்பதை நீதிமன்றங்கள் அங்கீகரிக்கின்றன. ஒரு நல்ல காரணம் இருப்பதாக - அதற்கான புறவய நியாயப்படுத்தல் ஒன்று இருப்பதாக - நிரூபிக்க முடிந்தால் மறைமுக பாரபட்சம் சட்டப்பூர்வமானதாக முடியும்.

உதாரணமாக, மருத்துவமனை நோய்த்தொற்றுக் கட்டுப்பாட்டுக் கொள்கைகள் காரணமாக நகைகளை அணிவதைத் தடைசெய்வது சில குழுக்களுக்கு பாதகமாக இருக்கும். எனினும் இது பொது சுகாதாரத்தின் அடிப்படையில் நியாயப்படுத்தப்படுகிறது.

பொது சுகாதாரம் நிச்சயமாக மதம் அல்லது நம்பிக்கைக்கான சுதந்திரத்திற்குரிய மட்டுப்பாடுகளை விதிப்பதற்கான நியாயமான காரணியொன்றாகும். ஆனால் மறைமுக பாரபட்சம் தொடர்பாக, நீதிமன்றங்கள் ஏனைய காரணிகளையும் ஏற்றுக்கொள்கின்றன. உதாரணமாக, ஒரு நிறுவனம் தனது கொள்கைகளை மாற்றுதல் நிறுவனத்தின் நலன்களைக் குறைமதிப்பிற்கு உட்படுத்தும் என்று வாதிடலாம். ஆடை விற்பனையாளர்கள் அவ் ஆடை நிறுவனத்தின் தயாரிப்புக்களையே அணிய வேண்டுமென தேவைப்படுத்துகின்ற ஆடை நிறுவனமொன்று, மத காரணிகளின் அடிப்படையில் அவ் ஆடைகளை அணிய மறுக்கின்ற ஆடை விற்பனையாளரை பணிக்கமர்த்த வேண்டும் என தேவைப்படுத்தப்படாது.

ஆகவே, நேரடி பாரபட்சம் தடைசெய்யப்பட்டுள்ள அதேவேளை, தனிநபர்கள் மற்றும் குழுக்களின் தேவைகளை சந்திப்பதற்கான நியாயமான வழிகளைக் கண்டுபிடிப்பதன் மூலம் மறைமுக பாரபட்சம் முடிந்தவரை தவிர்க்கப்பட வேண்டும்.

**மட்டுப்பாடு பாரபட்சமானது அல்ல என்பதை நாங்கள் உறுதிப்படுத்தியவுடன், அது விகிதசமனானதா என்பதை நாங்கள் தீர்மானிக்க வேண்டும்.**

வெளிப்படுத்தல் எந்த அளவிற்கு மட்டுப்படுத்தப்பட வேண்டும்? எதை யாருக்காக, எப்போது மற்றும் எங்கே தடை செய்ய வேண்டும்?

குறிப்பிட்ட பணியிடங்களில் குறிப்பிட்ட தொழில்களுக்கு குறிப்பிட்ட வகையான மத ஆடைகளை தடை செய்வதற்கும், தெருவில் அனைவரும் மத ஆடைகளை அணிவதைத் தடை செய்வதற்கும் இடையில் பெரிய வித்தியாசம் உள்ளது!

எனவே சர்வதேச நீதிமன்றங்கள் விகிதசமன் தன்மையினைப் பார்க்கின்றன. ஐக்கிய அமெரிக்காவில் உள்ள நீதிமன்றங்கள் இன்னும் கடுமையான சோதனையைப் பயன்படுத்துகின்றன – மட்டுப்பாடுகள் சாத்தியமானளவு குறைந்தளவான மட்டுப்படுத்துகின்ற வழியில் பிரயோகிக்கப்பட வேண்டும்.

**சில நீதிமன்றங்கள் கவனத்தில் கொள்ளும் ஒரு இறுதி அம்சம் தங்கள் கடமைகளை நிறைவேற்றுவதில் தேசிய அதிகாரிகளுக்கு வழங்கப்படும் தற்துணிபு அதிகாரம் ஆகும்.** இவ் உலகம் பன்மைத்தன்மையானது என்பதுடன் மனித உரிமைக் கோட்பாடுகளை தேசிய சூழமைவினை அடித்தளமாகக் கொண்டு பல வழிகளில் நடைமுறைக்கு கொண்டு வர முடியும்.

இதன் காரணமாக, சில சர்வதேச நீதிமன்றங்கள் தங்கள் கடமைகளை நிறைவேற்றுவதில் தேசிய அதிகாரிகளுக்கு வழங்கப்படும் தற்துணிபு அதிகாரம் பற்றியக் கோட்பாட்டினைக் கருத்தில்கொள்கின்றன. இதன் பொருள் என்னவென்றால், தேசிய அதிகாரிகள் தேசிய சூழலை நன்கு புரிந்திருப்பார்கள் என்பதனால் அவர்களே தேசிய சட்டத்தை வகுப்பதற்கான சிறந்த நபர்களாவார். எனவே சர்வதேச நீதிமன்றங்கள் அவர்களுக்கு குறிப்பிட்டளவான தற்துணிபினை வழங்குகின்றன.

அரசிற்கு வழங்கப்படுகின்ற தற்துணிபிற்கான வரம்பெல்லை எவ்வளவு பரந்ததாக இருக்க வேண்டும் மற்றும் நீதிமன்றங்கள் அதிகளவு பரந்த வரம்பெல்லையினை வழங்க வேண்டுமா என்ற கேள்விகள் விவாதிக்கப்பட வேண்டிய முக்கிய விடயங்களாகும்!

சுருங்கக்கூறின்:

ஒரு மட்டுப்பாடு அனுமதிக்கப்படக்கூடியதா என்பதைப் பற்றி சிந்திப்பதற்கு நாம் பின்வரும் செயன்முறையைப் பயன்படுத்துகிறோம்:

i. சட்டமானது உங்களது மதம் அல்லது நம்பிக்கைகளைக் கொண்டிருப்பதற்கான அல்லது மாற்றுவதற்கான முழுமையான உரிமையினை மட்டுப்படுத்துகின்றதா அல்லது வெளிப்படுத்தலொன்றை மட்டுப்படுத்துகின்றதா என தீர்மானித்தல்.
ii. மட்டுப்படுத்தப்பட்டுள்ள நடத்தை பாதுகாக்கப்பட்ட வெளிப்படுத்தலொன்றாகக் கருதப்படுகிறதா என தீர்மானித்தல்.
iii. குறித்த மட்டுப்பாட்டிற்கு சட்ட அடிப்படை இருக்கிறதா என்று பார்த்தல்.
iv. குறித்த வெளிப்படுத்தலானது, ஏனையோரின் உரிமைகள் மற்றும் சுதந்திரங்கள் போன்ற மட்டுப்பாட்டிற்கான நெறிமுறையான காரணியொன்றிற்கு எந்தளவிற்கு அச்சுறுத்தலாய் அமைந்துள்ளது என தீர்மானித்தல்.
v. மட்டுப்பாடு நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ பாரபட்சமாக இருக்கிறதா என்று பார்த்தல்.
vi. ஏற்படுத்தப்பட்டுள்ள அச்சுறுத்தலுக்கு குறித்த மட்டுப்பாடு விகிதசமனானதாக உள்ளதா மற்றும் அதனைத் தீர்ப்பதில் பயன்மிக்கதாக உள்ளதா என அவதானியுங்கள்.

மனித உரிமைகளுடன் இணங்கிக் கொள்ளும்பொருட்டு நீதிமன்றங்கள் பயன்படுத்த வேண்டிய வாதங்களை நாம் புரிந்து கொள்ளும்போது, எங்கள் உரிமைகளை இன்னும் திறம்பட கோரலாம். நீதிமன்றங்களும் அரசாங்கமும் அதை சரியாகப் பின்பற்றுகின்றனவா அல்லது

அவை உண்மையில் மதம் அல்லது நம்பிக்கைக்கான சுதந்திரத்தினை மீறுகின்றனவா என்பது பற்றிய பொது விவாதத்திற்கு நாம் இன்னும் முழுமையாக பங்களிக்க முடியும்.

Copyright SMC 2018